


மத்தியக் கிழக்கு தேசங்களில் இயங்கிக்கொண்டிருந்த அத்தனை தீவிரவாத இயக்கங்களுக்கும், போராளி இயக்கங்களுக்கும் 1995-ம் ஆண்டு மிகப்பெரிய அடி ஒன்றை அமெரிக்கா அளித்தது.

பாலஸ்தீன் உள்பட ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்டிருந்த பல அமைதி முயற்சிகள், பேச்சுவார்த்தைகளுக்குப் பங்கம் வரும்படி எந்தெந்த அமைப்புகள் எல்லாம் நடந்துகொள்கின்றனவோ, அவற்றின் அமெரிக்கச் சொத்துகள் முழுக்க முடக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அமெரிக்கச் சொத்து என்பது இது, அது என்று ஒவ்வொன்றாகப் பிரித்து ஆராயமுடியாத ஒரு விஷயம். நிலமாக இருக்கலாம். பணமாக இருக்கலாம். வங்கிக் கணக்குகளாக இருக்கலாம். தொழில் முதலீடுகளாக இருக்கலாம். வசூல் ராஜாக்களின் கஜானாக்களாக இருக்கலாம். எதுவாகவும் இருக்கலாம்.

அமெரிக்காவில் ஒரு சௌகரியம். யாரும் ஓர் அறக்கட்டளை லெட்டர் பேடு ரெடி பண்ணிவிட்டால், ரைட் ராயலாக அங்கே வசூல் வேட்டையில் இறங்கிவிட முடியும். நல்ல வட்டி விகிதங்கள் அளிக்கும் அமெரிக்க வங்கிகளில் சேமித்து வைக்க முடியும். நிறைய சலுகைகள், கடனுதவி, அது, இது என்று அள்ளிக் கொடுக்கிற மண் அது. பெரும்பாலான மத்தியக் கிழக்கு இயக்கங்கள், மாற்றுப்பெயரில் அமெரிக்க மண்ணில் அறக்கட்டளைகள் பதிவு செய்துதான் சம்பாதிக்கின்றன. தங்களைப் பாதிக்காதவரைக்கும் அமெரிக்க அரசும் இவற்றையெல்லாம் பெரிதாகக் கண்டுகொள்கிற வழக்கமில்லை. அல் காயிதா தொடங்கி அத்தனை இயக்கங்களுக்குமே அமெரிக்கக் கிளைகளும், அதன் மூலமான வசூலும் இருக்கத்தான் செய்தன.

இந்த விஷயத்தில்தான் அப்போது கைவைத்தார்கள். குறிப்பாக, ஓஸ்லோ ஒப்பந்தத்தை ஹமாஸ் மிகக் கடுமையாக எதிர்க்கவும் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்தவும், வன்முறையில் ஈடுபட்டு அழிவுகளை ஏற்படுத்தவும் தொடங்கிய பிறகு, அமெரிக்காவில் ஹமாஸின் அடிப்பொடிகளைத் தேடித்தேடி அமுக்க ஆரம்பித்தார்கள். கூடவே அவர்களது வசூலையும். கிட்டத்தட்ட பத்து லட்சம் அமெரிக்க டாலர்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

பிறகு, 2001-ம் ஆண்டில் மீண்டும் இதேபோன்ற ஒரு நடவடிக்கையின்கீழ், 'தி ஹோலி லாண்ட்' அறக்கட்டளை, 'அல்அக்ஸா இஸ்லாமிய வங்கி' மற்றும் 'Beit elMal Holdings' என்ற அமைப்பின் அமெரிக்கச் சொத்துகள், வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன.

அதோடு விட்டார்களா என்றால் இல்லை. 2003-ம் ஆண்டு பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து, பிரிட்டன், ஆஸ்திரியா, லெபனான் ஆகிய ஐந்து நாடுகளில் இயங்கிக் கொண்டிருந்த ஐந்து வெவ்வேறு அமைப்புகளை, ஹமாஸின் ஆட்கள் என்று அடையாளம் கண்டு, அவற்றைத் தடை செய்து, சொத்து முடக்கமும் செய்தார்கள்.

ஹமாஸ் யோசித்தது. தோன்றியது எதற்காக? பாலஸ்தீன் விடுதலைக்காக. ஆனால் நடப்பது என்ன? தீவிரவாத இயக்கம் என்கிற முத்திரை. மற்றும் சொத்து முடக்கம். இஸ்ரேல் நிகழ்த்தும் பயங்கரவாத நடவடிக்கைகள் எதுவும் கேள்விக்குள்ளாக்கப்படுவதில்லை. அதனை ஒரு பயங்கரவாத அரசாக யாரும் பார்க்க மறுக்கிறார்கள்.

எங்கே இடறுகிறது?

இது ஆயுதப் போராட்டத்தின் காலம் அல்ல. தேர்தல் ஜனநாயகத்துக்குத்தான் மதிப்பும் மரியாதையும் கிடைக்கிறது. பாலஸ்தீன் விடுதலைதான் ஹமாஸின் நோக்கமே தவிர, ஆயுதப் போராட்டம் மட்டுமே அல்ல. இஸ்ரேலுக்கு ஆயுத பாஷைதான் புரியும் என்பதால், அதனை மேற்கொண்டார்கள். ஆனால், உலகத்துக்குப் புரியாத மொழியில், உலகம் அங்கீகரிக்க விரும்பாத மொழியில் தன் தரப்பைச் சொல்லிக்கொண்டிருப்பதில் என்ன நியாயம்?

என்றைக்கோ அராஃபத் யோசித்ததுதான். 2004-ம் ஆண்டுத் தொடக்கத்தில்தான் ஹமாஸ் இதனை யோசித்தது. அந்த வருடம் ஜனவரி 26-ம் தேதி ஹமாஸின் தலைவர் அப்துல் அஜிஸ் அல் ரண்டிஸி இயக்கத்தின் சரித்திரத்திலேயே முதல் முறையாகப் போர் நிறுத்தத்தை அறிவித்தார். பத்து வருடப் போர் நிறுத்தம். அரபு மொழியில் இதனை 'ஹுண்டா' (Hunda) என்று அவர் குறிப்பிட்டார்.

1967-ம் ஆண்டு நடந்த அரபு - இஸ்ரேல் யுத்தத்தின்போது, இஸ்ரேல் தான் கைப்பற்றிய பகுதிகள் முழுவதையும் பாலஸ்தீனியர்களிடமே திருப்பித் தருவதாகச் சொல்லிக் கொஞ்சம் நல்லுறவுப் பாலம் அமைக்க சிமெண்ட் மூட்டைகள் இறக்கியதே, அதற்குப் பதில் மரியாதை இது.

ஷேக் அகமது யாசின் சொன்னார். காஸாவிலும் மேற்குக் கரையிலும் பாலஸ்தீனிய சுயாட்சி அமைவதைத் தாங்கள் ஏற்றுக்கொள்வதாக. இந்த அறிக்கைக்கு ஒரு பின்னிணைப்பை ரண்டிஸி உடனே அளித்தார். 'இப்போதிருக்கும் சூழ்நிலையில், முழுப் பாலஸ்தீனத்தைத் திரும்பப் பெறுவது கஷ்டம் என்பதை அதன் யதார்த்த உண்மைகளின் அடிப்படையில் ஒப்புக்கொள்கிறோம். ஆகவே, பகுதியளவில் பாலஸ்தீன் திரும்பக் கிடைத்ததில் சந்தோஷப்படுகிறோம்.' அப்போது சொன்னதுதான். 'இந்தப் போர் நிறுத்தமும் அமைதியும் பத்தாண்டுகள் நீடிக்கும். பத்தாண்டுகள் மட்டும்.'

சொன்னதுதான். ஆனாலும் யுத்தம் தொடரத்தான் செய்தது. அதே 2004 ஆகஸ்டிலேயே பீர் ஷெவா (Beer Sheva) என்கிற இஸ்ரேலிய நகரத்தில், ஹமாஸ் போராளிகள் குண்டுத் திருவிழா நடத்தத்தான் செய்தார்கள். பதினைந்து பேர் பலி. 125 பேர் படுகாயம். பத்து வருட அமைதி என்னாயிற்று என்று அப்போது ஹமாஸ் தரப்பில் ஏதும் சொல்லப்படவில்லை. அது தொடரும் என்று மட்டும் அவ்வப்போது அறிவிப்பு வந்தது. அதுவும் தொடர்ந்தது, இதுவும் தொடர்ந்தது!

இஸ்ரேல் அமைதியாக இருக்கும்வரை தான் ஆயுதம் ஏந்தமாட்டேன் என்பதுதான் ஹமாஸின் நிலைப்பாடு. எப்போதெல்லாம் இஸ்ரேலிய ராணுவம் பாலஸ்தீனியப் பகுதிகளில் அத்துமீறியதோ, அப்போதெல்லாம் ஹமாஸ் தனது அமைதி அறிவிப்பைச் சற்று ஒதுக்கிவைத்துவிட்டு, அதிரடிகளில் இறங்க யோசித்ததில்லை.

இதுதான் பாலஸ்தீன் அத்தாரிடியாக இருந்து ஆட்சி புரிந்துவந்த பி.எல்.ஓ.வுக்குச் சங்கடம் கொடுத்தது. இதுதான் பி.எல்.ஓ ஹமாஸ் உறவில் மேலும் விரிசல் ஏற்படுத்தியது. இதுதான் எப்படியாவது ஹமாஸை அடியோடு ஒழித்துவிடமுடியாதா என்று இஸ்ரேலை வெறிகொண்டு அலையவும் செய்தது. அராஃபத்துக்கும் ஹமாஸ் தலைவர்களுக்கும் இடையில் இருந்த மோதலைப் பயன்படுத்தி, பி.எல்.ஓ.வைக்கொண்டே ஹமாஸை ஒழிக்க ஏதாவது வழி கிடைக்குமா என்று இஸ்ரேலிய உளவுத்துறை அலைந்துகொண்டிருந்தது.

ஆனால், ஒன்று மறந்துவிட்டார்கள். அடித்துக்கொண்டாலும், திட்டிக்கொண்டாலும் இரு தரப்பும் ஒருபோதும் விட்டுக்கொடுத்ததில்லை. ஆயிரம் இருந்தாலும் சொந்தச் சகோதரர்கள். அந்த உணர்வில்லாது போனதால்தானே ஒரு காலத்தில் பாலஸ்தீனையே இஸ்ரேலுக்குத் தாரைவார்த்தார்கள்? ஆகவே, செய்த தவறை இன்னொரு முறை செய்ய, இரு தரப்புமே தயாராக இல்லை. இஸ்ரேலுக்கு இது சந்தேகமில்லாமல் மிகப்பெரிய ஏமாற்றமே.

இந்த ஏமாற்றத்தைத்தான், அவர்கள் யாசிர் அராஃபத்துக்கு இறுதிக் காலத்தில் கொடுத்த எண்ணற்ற குடைச்சல்களின்மூலம் தீர்த்துக்கொள்ளப் பார்த்தார்கள். உடல்நலம் சரியில்லாத நிலையில் இருந்தவரை வீட்டுச் சிறையில் வைத்து, புல்டோசரால் இடித்து, இல்லாத கூத்தெல்லாம் செய்து ரசித்தார்கள்.

இது ஒருபுறமிருக்க, 2005-ம் ஆண்டு பாலஸ்தீன் அதிபர் தேர்தல் அறிவிக்கப்பட்டது. அமைதித் திட்டம் வரை முன்னேறிய ஹமாஸ், அந்தத் தேர்தலில் கண்டிப்பாகப் போட்டியிடும் என்றுதான் அராஃபத்தும் பி.எல்.ஓ.வும் மற்றவர்களும் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் ஹமாஸ் கவனமாக அந்தத் தேர்தலைத் தவிர்த்தது. அராஃபத்துக்கு தர்மசங்கடங்களை விளைவித்துவிடக் கூடாது என்பதற்காக. ஆனால், அதே ஆண்டு நடைபெற்ற முனிசிபல் தேர்தல்களில் ஹமாஸ் அதிரடியாகப் போட்டியிட்டு கணிசமான வெற்றியும் பெற்றது. இது, அதுநாள்வரை பிராந்தியத்தின் ஒரே பெரும் கட்சியாக அறியப்பட்ட அராஃபத்தின் ஃபத்தா இயக்கத்தினருக்கு மிகப்பெரிய அதிர்ச்சியளித்தது. மேற்குக் கரை அப்போதும் பி.எல்.ஓ.வின் கோட்டையாகத்தான் இருந்ததென்றாலும் காஸாவில் அவர்களால் எழுந்திருக்கவே முடியவில்லை.

கண்ணுக்குத் தெரிய, ஹமாஸ் அந்தப் பிராந்தியத்தின் சக்கரவர்த்தியாக எழுந்து நின்றதை இஸ்ரேலும் அதிர்ச்சியுடன் தான் கவனித்தது.

தேர்தல் அரசியலில் ஹமாஸா?

அத்தனை பேருக்கும் இதுதான் கேள்வி. நம்பமுடியவில்லை. ஹமாஸுக்கும் ஜனநாயகத்தில் நம்பிக்கை வந்துவிட்டதா? புரியவில்லை. ஒருவேளை பி.எல்.ஓ.வுக்கு எதிரான இயக்கமாகத் தன்னை பகிரங்கமாக முன்னிறுத்திக் கொள்ளும் முயற்சியா? இது இஸ்ரேலுக்கு அல்லவா வாய்ப்பாகப் போய்விடும்? குழம்பித் தவித்தார்கள்.

ஹமாஸின் தலைவர்கள் யாரும் வாய் திறக்கவில்லை. ஆமாம், தேர்தலில் நிற்கிறோம் என்பதுடன் நிறுத்திக்கொண்டார்கள்.

2006 நாடாளுமன்றத் தேர்தலில் ஹமாஸ் பங்குபெறுவதாக அறிவிக்கப்பட்டபோது, ஒட்டுமொத்த பாலஸ்தீனிலும் பதற்றமும் வியப்பும் பற்றிக்கொண்டது. தேர்தல் ஒழுங்காக நடைபெற வேண்டுமே என்கிற கவலை ஒருபுறம். ஹமாஸ் - பி.எல்.ஓ மோதல்கள் அசிங்கமான நிலைக்குப் போய்விடாமல் இருக்கவேண்டுமே என்கிற படபடப்பு மறுபுறம். 1996-க்குப் பிறகு எத்தனையோ முறை அறிவிக்கப்பட்டு, இஸ்ரேலுடனான மோதல்களால் தள்ளித் தள்ளி வைக்கப்பட்ட தேர்தல், இம்முறை சொந்தச் சகோதர உரசல்களால் தள்ளிவைக்கப்பட்டுவிடுமோ என்கிற பயம் இன்னொரு புறம்.

அனைத்தையும் மீறி, ஜனவரி 25-ம் தேதி ஆட்சி மன்றக் குழுவுக்கான (Palestinian Legislative Council) தேர்தல் நடந்தது. மேற்குக் கரை, காஸா மற்றும் கிழக்கு ஜெருசலேம் பகுதிகளை ஒருங்கிணைத்த பாலஸ்தீன் அத்தாரிடிப் பிராந்தியத்துக்கான தேர்தல்.

பிராந்தியமே திருவிழாக்கோலம் கொண்டுவிட்டது. முன்னதாக, மேற்கத்திய மீடியாவும் மத்தியக் கிழக்கு மீடியாவும் பாலஸ்தீன் பகுதிகளில் கருத்துக் கணிப்புகள் நடத்தின. பெரும்பாலும், ஃபத்தாவுக்குச் சாதகமாக இருந்தது, கருத்துக் கணிப்பு முடிவுகள். ஹமாஸுக்கு இரண்டாவது இடம் கிடைத்தது.

அப்படியா? இன்னும் ஃபத்தாவின் செல்வாக்குதான் மேலே நிற்கிறதா? நல்லது. ஹமாஸ், பிரசாரத்தில் மிகத் தீவிரமாக இறங்கியது. தவறிக்கூட வன்முறையின் வாசனை, தேர்தல் சமயத்தில் எட்டிப்பார்த்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள். காஸாவிலும் சரி, மேற்குக் கரையிலும் சரி. ஒரு துப்பாக்கி கூடக் கண்ணில் தென்படவில்லை. மாறாக, கொடிகளும் கோஷங்களும் விண்ணைத் தொடப் போட்டி போட்டன. ஆயுதமேந்தியவர்கள் அத்தனை பேரும் மேடை ஏறி மைக் பிடித்தார்கள். அமைதிதான் அத்தனை பேரின் விருப்பமும். விருப்பமில்லாமல்தான் ஆயுதமேந்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வாய்ப்புக் கொடுங்கள். இந்தத் தாற்காலிக அமைதியை நிரந்தர அமைதியாக்க முடிகிறதா பார்க்கிறோம்.

கோரிக்கைகள், வேண்டுகோள்கள், விண்ணப்பங்கள். மக்கள் இரு தரப்புக் கூட்டங்களுக்கும் கூடினார்கள். இரு தரப்புக்கும் கைதட்டினார்கள். அவர்களுக்கென்ன? யார் குத்தியாவது அரிசி வெந்தால் சரி.

தேர்தலுக்குப் பிந்தைய எக்சிட் போலிலும் ஃபத்தாவுக்குச் சாதகமாகத்தான் முடிவுகள் வந்தன. உண்மையில் தனக்குக் கிடைத்த அந்த பிரமாண்டமான வெற்றியை ஹமாஸ் தலைவர்களால் நம்பவே முடியவில்லை. இரண்டாம் இடம் என்பதற்கு மனதளவில் அவர்கள் தயாராகிவிட்டபோது தேர்தல் முடிவுகள் அவர்களுக்கு மிகச் சாதகமாக வந்து சேர்ந்தன.

நான்கு லட்சத்து நாற்பதாயிரத்து நானூற்று ஒன்பது வாக்காளர்கள் ஹமாஸுக்கு ஓட்டளித்திருந்தார்கள். மொத்தம் 74 சீட்டுகள் கிடைத்திருந்தன. ஃபத்தா இரண்டாவது இடத்தில் இருந்தது. ஆங்காங்கே உதிரிகள் கொஞ்சம். சுயேச்சைகள் கொஞ்சம்.

ஹமாஸ்தான் முதலிடம்! என்ன ஆயிற்று? எப்படி இது சாத்தியம்? கருத்துக் கணிப்புகள் எப்படிப் பொய்க்கும்?

யாருக்கும் புரியவில்லை. மக்கள் எப்படித் திடீரென்று மனதை மாற்றிக்கொள்வார்கள்? அல்லது கருத்துக் கணிப்புகளில் மறைத்துப் பேசினார்களா? எனில், எதற்காக?

புரியவில்லை. பி.எல்.ஓ. கவலைப்பட்டது. ஃபத்தா கலங்கி நின்றது. அராஃபத் இல்லாத வெறுமை அப்போது அப்பட்டமாக அவர்களைத் தாக்கியது. 'இதோ ஒரு புதிய, அதி நவீன ஆயுதம்!' என்று எதையோ புதையலாகக் கண்டெடுத்த மாதிரி, பரவசத்துடன் ஹமாஸ் முன்னே எழுந்து நின்றது.

ஃபத்தாவுடன் சேர்ந்து இஸ்ரேலிய அரசும் கவலைப்படத் தொடங்கியது.